**புலத்கொஹுபிட்டிய பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புலத்கொஹுபிட்டிய பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்காகக் கிடைத்த ரூபா 1,898,508 கூட்டுத்தொகையான முத்திரைக் கட்டணம் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் யூன் முதல் திசெம்பர் வரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் பதவியணியினரின் படிகளுக்கான ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்காகக் கிடைத்த ரூபா 2,737,102 கூட்டுத்தொகையான நிலுவை நீதிமன்றத் தண்டப்பண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய வருமானம் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நீதிமன்றத் தண்டப்பணம் பதவியணியினரின் படிகள் கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(இ) ஆதனவரி மற்றும் ஏக்கர் வரிகளின் பெறுவனவுகள் முறையே ரூபா 29,495 மற்றும் ரூபா 3,049 தொகைகளாக ரூபா 32,544 கூட்டுத்தொகையானது

மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் கடன்கொடுத்தோர் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 38,431 கூட்டுத்தொகையான நூலகப் புத்தகங்கள் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைப்பதன் மூலம் மூலதனமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியின் போது கிடைக்க வேண்டிய மீண்டெழும் வருமானங்களின் ரூபா 1,131,293 கூட்டுத்தொகையானது வருமானக் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் வழங்கல் மற்றும் உபகரணச் செலவினமான ரூபா 2,512,415 தொகையினைக் கணிப்பீடு செய்தபோது ஆண்டின் கொள்வனவுகள் ரூபா 1,616,486 தொகையில் ஆண்டின் வழங்கல்கள் ரூபா 317,246 தொகை சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்ட காரணத்தால் வழங்கல் மற்றும் உபகரணச் செலவினம் ரூபா 634,432 தொகை அதிகரித்தக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2013 இன் பிரதேச அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாகாண சபை நிதிஏற்பாடுகளின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகள் பொது வைப்புக் கணக்கின் மூலம் செலவிடப்பட்டதன் காரணமாக நிதிஏற்பாடுகளின் பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 2,907,800 தொகை மற்றும் நிர்மாணங்களுக்கான கொடுப்பனவுகளின் ரூபா 1,863,675 கூட்டுத்தொகை மூலதனப் பெறுவனவுகள் மற்றும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பொதுக் களஞ்சியத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 108,118 தொகையான களஞ்சியப் பொருட்கள் மீளாய்வாண்டின் போது நேரடியாக மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதியின் பெறுமதியான ரூபா 177,969 தொகை நேரடியாக மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 149,608 தொகையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைப்பதன் மூலம் மூலதனமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2013 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, பொது நூலகத்திற்குரிய பொருட்பதிவேட்டு பொருட்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 161,520 தொகை, நிலையான சொத்துக்களின் கீழ் ஐந்தொகையில் கணக்கு வைக்கப்படாமையால் அப்பெறுமானத்தால் நிலையான சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) நிலையான சொத்துக் கணக்கின் கூட்டுத்தொகை மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்குச் சமமாக இருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அவதானிக்கப்பட்ட ரூபா 9,517,856 தொகையான வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) முன்னைய ஆண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் கணக்கிற்கும் கடன்கொடுத்தோர் பட்டோலைக்குமிடையே காணப்பட்ட ரூபா 1,206,237 தொகையான வேறுபாட்டை இணக்கஞ் செய்யாது மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்தில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(கா) பொருட் பதிவேட்டுப் பொருட்களின் பெறுமதியையும் தளபாடம் மற்றும் பொருத்திகளின் கணக்கு மீதியையும் இணக்கம் செய்த போது காணப்பட்ட ரூபா 212,288 தொகையான வேறுபாடு நேரடியாக திரண்ட நிதியம் மற்றும் பற்றாக்குறைக் கணக்கின் மூலம் சீராக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,066,418 ஆகும்.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2005 யூன் 01 ஆந் திகதிய 2005/04 ஆம் இலக்க சப்கரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 03 (ii) மற்றும் (iii) ஆம் பந்திகள் | காணிகள் கூறிடப்பட்டு விற்பனை செய்வதற்குரிய கூறிடல் திட்டம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன் சபையின் வருமானப் பரிசோதகர் / கட்டுப்பாட்டாளர் மூலம் தற்காலிக மதிப்பீடொன்று பெறப்பட்டு அந்த மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 1 சதவீத முற்பணம் விற்பனையாளரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2012/05/29 ஆந் திகதிய 03/2012 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை. | எரிபொருள் படியினைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதேச சபை உறுப்பினர்களுக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள், மோட்டார் வாகனம், முச்சக்கர வண்டி, அல்லது வான் வாகனமொன்று இருக்க வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்தும் அவ்வாறான |

வாகனமொன்று இல்லாமல் இரண்டு உறுப்பினர்களுக்கு எரிபொருள் படியாக ரூபா 128,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,352,552 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,791,924 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,144,476 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,211 | 1,087 | 124 |
| (ii) | வாடகை | 1,978 | 1,756 | 222 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 235 | 210 | 25 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,460 | 18,379 | (9,919) |

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம்

02 நீதவான் நீதி மன்றங்களிலிருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கடை வாடகை**

சபையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தைத் தொகுதியின் 10 கடைகள் 2011 ஆம் அண்டு முதல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கடைகளுக்காக ஒரே தடவையில் கிடைக்கும் பணமாக ரூபா 10,190,000 தொகை பெறப்பட்டிருந்தது. மதிப்பீட்டு அறிக்கையின் படி மேல் மாடியின் கடையொன்று ரூபா 5,000 படியும் தரைமாடியின் கடையொன்று ரூபா 7,500 படியும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த மதிப்பீடு மூன்று வருடகாலத்திற்காக அமுலிலிருக்கும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. 2010 நவம்பர் 24 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது ஒரு கடைக்கு ரூபா 1,250 படி அறவிடுவதற்கு ஏகோபித்து தீர்மானம் எடுக்கப்பட்டு அதன் படி பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) ரூபா 53,300 தொகையான ஊழியர் பிணை வைப்புப் பணம் ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் பாஸ் புத்தகங்களில் வைப்புச் செய்வதற்குப் பதிலாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இடமாற்றலாகிச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடாது காணப்பட்ட ரூபா 56,300 கூட்டுத்தொகையான ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் (பிரதேச சபை) நிதி மற்றும் நிருவாக விதிக் கோவையின் 5(7) இன் படி காசு மற்றும் களஞ்சியங்கள் தொடர்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்